# Jai Nagar Development Association

Regd. No 321/1988

நாள்: 23.05.2018

நண்பர்களே,

நமது ஜெய் நகர் பகுதியில் பாதுகாப்பு நிமித்தமாக காவல்துறையின் கண்காணிப்பில் இயங்கும் வகையில் CCTV கேமரா கருவிகளை தேர்ந்தெடுக்கப்பட்ட சில இடங்களில் நிறுவவேண்டும் என்றும் அதற்கான செலவுகளை முழுமையாக குடியிருப்போரே ஏற்க வேண்டும் என்றும் இதனை விரைவாக முடித்து தர வேண்டும் என்றும் காவல் துறை அதிகாரிகள் சில தினங்களாக JNDA சங்கத்தை அணுகி வருகிறார்கள்.

இது குறித்து 20.05.2018 அன்று JNDA அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் CMBT காவல் நிலைய ஆய்வாளர் திரு ரூபன் அவர்களும், உதவி ஆய்வாளர்கள் Ms. பிரேமா Mr. ராஜாசிங் ஆகியோரும் கலந்து கொண்டு உரையற்றினார்கள்.

'வயர்லெஸ்' முறையில் இயங்கக்கூடிய 3 IP கேமராக்களை கொண்ட ஒரு பாயிண்ட் ஏறத்தாழ ரூ.51,000/- என்று காவல்துறையின் வாயிலாக கிடைக்கப்பெற்றுள்ள 'கொட்டேஷன்' மூலம் அறிகிறோம். (நகல் இணைக்கப்பட்டுள்ளது.)

**முதல் பிரதான சாலையில்:**

(1) ஆதிபராசக்தி கோவில் 7வது தெரு Jn, (2) வள்ளுவர் சாலைக்கு திரும்பும் Jn, (3) 13வது தெரு Jn,

**இரண்டாம் பிரதான சாலையில்:**

(4) வள்ளுவர் சாலைக்கு திரும்பும் Jn, (5) 8வது தெரு இணைப்பு (6) 19வது தெரு இணைப்பு **மற்றும்**
(7) பாஞ்சாலியம்மன் கோவில் St வள்ளுவர் Rd Jn, (8) சக்தி நகர் 4வது தெரு Jn, (இது நாம் சொன்னது) ஆகியவை காவல்துறை அதிகாரிகள் தேர்ந்தெடுத்து பரிந்துரைத்துள்ள சில இடங்கள்.

பல இடங்கள் விடுபட்டுள்ளதாக நாம் கருதினாலும் பிற்காலத்தில் தேவைக்கேற்ப நிதி சேகரிப்புக்கேற்ப நாம் இணைத்துக்கொள்ளலாம் என்கின்ற புரிதலோடு நாம் இதை அணுகலாம் என்று கருதுகிறோம்.

மேற்கூறிய இடங்களில் CCTV கேமராக்கள் நிறுவ முற்பட்டால் நமக்கு உடனடியாக தேவை ரூ. 4 லட்சம்.

இதற்கு ஆய்வாளர் திரு ரூபன் அவர்கள் கூறிய ஆலோசனை ஒரு வீட்டிற்கு குறைந்தது ரூ.1,000/-. இந்த ஆலோசனையை அவையிலிருந்த அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டார்கள்.

நமக்கு கூடுதல் நிதி சேருமானால் மேலும் சில இடங்களில் தேர்ந்தெடுத்து நாம் நிறுவிக்கொள்ளலாம்.

நம் பகுதியின் பாதுகாப்பு கருதி அனைவரது ஒத்துழைப்பையும் நாடுகிறோம், பகுதி பாதுகாப்பு என்பது அனைவருக்குமானது. இதில் உறுப்பினர், உறுப்பினர் அல்லாதோர் என பாகுபடுத்த வேண்டாம் என்று கருதுகிறோம். வேறுபாடுகளை மறந்து அனைவரும் தங்களை இதில் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுகிறோம்.

வீட்டிற்கு குறைந்தது ரூ.1,000/- என்பது குறைந்தபட்ச நன்கொடை. உங்களில் பலர் கூடுதலாக வழங்க முடியும். சிலர் ஒரு பாயிண்ட்-க்கான முழு செலவையும் ஏற்றுக்கொள்ள முடியும். பகுதி நன்மையை கருதி முன் வரவேண்டும் என்று தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம். JNDA-வின் கீழ் செய்யப்படும் வரவு-செலவுகள் முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் இருக்கும் என்பதனை உறுதிப்படக்கூறிக்கொள்கிறோம்.

காவல்துறையின் கண்காணிப்பின் கீழ் நிறுவப்படவுள்ள திட்டம் என்பதால் இதில் யாருக்கும் தனிப்பட்ட முறையில் சாதனையாக இருக்க முடியாது என்பதையும் கூறிகொள்ள விரும்புகிறோம்.

ஒத்துழைப்பு நல்குவீர்கள் என்று நம்பிக்கையுடன் அணுகுகிறோம்.

அனைவரும் இணைந்து இந்த திட்டத்தை விரைவில் செயல்படுத்துவோம்.

நன்றிகளுடன்,

JNDA நிர்வாகக் குழு

C.தணிகைவேல் N.சிட்டிபாபு M.பன்னீர்செல்வன் N.அர்சுனன்

T.சுந்தரமூர்த்தி G.ராமமூர்த்தி N.ரமேஷ்குமார் மற்றும் I.ஜேசுராஜ் V.R.சிதம்பரம்

Administrative office: - No PC26, 1ST FLOOR, VELMURUGAN COMPLEX, MMDA COLONY
Chennai 600 087. EMAIL: - gopal.bluespheresolutions@live.com MOB - +91 9962622212

# QUOTATION FOR 4 MEGAPIXEL IP HYBRID CCTV SYSTEM

Dear Sir, Date: 16-05-2018

As per our discussion of CCTV requirement for K – **11 KOYAMBEDU POLICE STATION**
. We are submitting our competitive quote for CCTV.

| No. | Description | Qty | Rate | Amount |
|---|---|---|---|---|
| 1 | HIK-VISION : IP 4 MEGAPIXEL – COMMERCIAL USE<br><br>IP NETWORK - IR BULLET CAMERA- WDR EXIR (NIGHT VISION), HD<br>4 MEGAPIXEL, 6 mm Lens, 30-50 MTRS | 3 | 5,900 | 17,700 |
| 2 | HIK-VISION : 5 MEGAPIXEL – COMMERCIAL USE<br><br>4 CHANNEL – NETWORK VIDEO RECORDER – STARLITE | 1 | 9,000 | 9,000 |
| 3 | SEAGATE SKY HAWK : 3 YRS DIRECT WARRANTY<br><br>1 TB CCTV AV HARD DISK | 1 | 3,850 | 3,850 |
| 4 | ERD :<br><br>POWER SUPPLY – 12 v 10 Amps + COOLING FAN | 1 | 1,150 | 1,150 |
| 5 | GOBBLER :<br><br>BNC CONNECTORS , DC PIN & VIDEO BALUN | 3 SET | 300 | 900 |
| | Supply Total | | | **32,600** |
| | GST @18% | | | **5,868** |
| | Supply Total with Tax | | | **38,468** |
| II | Monitor , Cables & Conduits ( Screws, Clamps & T-Junctions ) | | | |
| 1 | D-LINK : CAT-6 DATA CABLE + STRAY WIRE FOR SUPPORT | 100 Mtr | 40 / MTR | **4,000** |
| 2 | DELL : SERVER RACK – 4 U | 1 | 1,400 | **1,400** |
| 3 | POLE : 15 FT " + ANGLE + CLAMP & FABRICATION + CCTV ENCLOSURE BOX | 1 | 2,000 | **2,000** |
| 4 | D-LINK : POE NETWORK SWITCH 100/1000 4 PORT | 1 | 3,000 | **3,000** |
| | INSTALLATION CHARGES + NET CONFIG (REMOTE MONITORING) | | | **2,000** |
| **III** | **Grand Total** | | | **50,868** |